Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 1, Special Issue - 1, January 2022 E-ISSN: 2583-0481

# Islamic Wedding Ceremonies in S. Arshia's Works

**Dr S. Devi**, Assistant Professor, The Standard Fireworks Rajarathnam College for Women, Sivakasi, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0003-3849-7035**
**DOI: 10.5281/zenodo.6621180**

## Abstract

*Tamil literature effectively does the work of reflecting the culture of the Tamil people. The creator has made it a habit to record in his works the biographical customs, beliefs, occupations, and rituals of the creativeness of the virtuous men. S. Arshuia is one of the famous Muslim writers in Tamil literature. She has registered the marriage customs in her works. Thus, the cultural elements of the marriage of the Muslim people are analyzed from the works of S.Ashia and explored in the article.*

**Keywords:** Nikah, Getting Marriage Permit, Wedding Invitation, Maher Amount, Pre-Wedding Ceremonies, Wedding Ceremonies.

## References

[1] *Quran* 30-21
[2] Arshia - *Seventh Partner*.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# எஸ்.அர்ஷியா படைப்புகளில் புலப்படும் இஸ்லாமிய திருமணச்சடங்குகள்

**முனைவர் சி. தேவி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
தி ஸ்டாண்டர்டுஃபயர்ஒர்க்ஸ் இராசரத்தினம் மகளிர்கல்லூரி, சிவகாசி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0003-3849-7035
DOI: 10.5281/zenodo.6621180

**ஆய்வுச்சுருக்கம்**

*ஒரு சமூகத்தின் பண்பாட்டை பிரதிபலிக்கும் பணியை இலக்கியங்கள் திறம்பட செய்கின்றன. படைப்பாளர் தனதுபடைப்பு மாந்தர்களின் வாழ்வியல் சார்ந்த பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள்,தொழில், சடங்குமுறைகள் என்பனவற்றைத் தனது படைப்புகளில் பதிவு செய்வதை வழக்கமாக்கியுள்ளனர். அவ்வகையில் எஸ்.அர்ஷியா அவர்களது படைப்புகளில் புலனாகும் இஸ்லாம் இனம் சார் மக்களின் திருமணம் சார்ந்த பண்பாட்டுக் கூறுகள் இங்கு கருதுகோளாக எடுத்து ஆராயப்பட்டுள்ளது.*

**திறவுச்சொற்கள்:** நிக்காஹ் - திருமண அனுமதி பெறல் - திருமண அழைப்பிதழ் - மஹர் தொகை – திருமணத்திற்கு முந்தைய சடங்குகள் - திருமணச்சடங்குகள்

**முன்னுரை**

ஒரு சமூகத்தின் பண்பாட்டை பிரதிபலிக்கும் பணியை இலக்கியங்கள் செய்கின்றன. பண்பாடு என்பது சமூக மக்களின் பழக்கவழக்கம் மற்றும் நம்பிக்கைகள் சார்ந்ததாகும். ஒரு குறிப்பிட்ட சமூக மக்களின் வாழ்க்கை முறையே அவர்களின் பண்பாடு என்று எடுத்துரைககப்படுகிறது. அவ்வகையில் எஸ்.அர்ஷியா அவர்களது படைப்புகளில் புலனாகும் இஸ்லாம் இனம் சார் மக்களின் திருமணம் சார்ந்த பண்பாட்டுக் கூறுகள் இங்கு கண்ணுறப்படுகின்றன.

**திருமணம்**

நிக்காஹ் என்ற திருமணம் இருமனம் இணையும் திருமணம் என்பது நமது சமுதாயத்தின் சட்டப்பூர்வமான உறவுமுறை அமைப்பு ஆகும். இத்திருமணம் இஸ்லாமிய சமூகத்தில் நிக்காஹ் என்ற சொல்லால் வழங்கப்படுகிறது. வாழ்க்கையை ஒழுக்கம் நிறைந்ததாகவும் பாசம் நிரம்பியதாகவும் மாற்ற உகந்த வழி திருமணம் என்றனர் சான்றோர். "நீங்கள் அவர்களிடம ஆறுதல் பெறுவதற்குரிய உங்கள் மனைவியரை உங்களில் இருந்தே உங்களுக்காக அவன் படைத்திருப்பதும் உங்களிடையே அன்பையும் கிருபையையும் உண்டாக்கி இருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும். சிநதிக்கும் சமுதாயததிற்கு நிச்சயமாக இதில் அத்தாட்சிகள இருக்கின்றன" என்று இறைவன் திருமறையில் எடுத்தியம்பியுள்ளார். இஸ்லாமியர்களில் பெரியப்பா.மற்றும்சித்தப்பாவின் ஆண் வாரிசுகளை மனம் செய்யும் வழக்கம் உள்ளது என்பதை "ஏழரைப்பங்காளி வகையறா" எனும் நாவலில் இஸ்மாயில் தன் மகள் பீஜான்பீ-க்கு தன் சகோதரன் மகனை மணம் முடித்து வைத்ததன் மூலம் அறியமுடிகிறது. இஸ்லாமியர்கள் வாழ்வில் குழந்தைமணம் செய்யும் பழக்கமும் உள்ளது. "ஏழரைப்பங்காளி வகையறா" நாவலில் குத்துஸ் தனக்கு சிறுவயதிலேயே திருமணம் நடந்த நிகழ்வை தாவுத் என்பவரிடம் சொல்வதன் மூலம் அறிந்துகொள்கிறோம்.

**திருமண அனுமதி பெறல்**

பண்டைய மக்கள் திருமணம் நடந்து முடிந்தபிறகே கணவனும் மனைவியும் முதன்முறையாக பார்ப்பது, பெரியோர் மட்டும் இணைந்து முடிவெடுப்பது என்பதை நடைமுறையாகக் கொண்டனர். காலப்போக்கில் மணமக்களின் விருப்பம் கேட்பது என்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர். மணமக்களின் விருப்பம் கேட்பது மணவாழ்வு நிலைக்க வேண்டும் என்ற அச்சத்தில் தான் என்றும் கூறலாம். கிறித்தவர்கள் திரமண நாளன்றும் மணமக்களிடம் மண ஒப்பந்தத்தை உறுதி செய்யும் வழக்கம் உள்ளது. இஸ்லாமிய்கள் மணம் நிகழும் முன்னதாக பெரியோர் மற்றும் உறவுகளிடம் அனுமதி கேட்கப்பட்ட பின்னர் மணமக்களிடமும் அனுமதி பெறப்படுகிறது. அதன் பின்னர் அதை உறுதிபடுத்தும் வகையில் ஒப்பந்த நோட்டில் கையெழுத்து வாங்குகின்றனர். அதன் பிறகே மணம் நிகழ்கிறது. இந்நிகழ்வுகளை “ ஏழரைப்பங்காளி வகையறா” நாவலில் தாவுத் ஆபில்பீ திருமணம் நிகழும் காட்சிகள் மூலம் அறியப்படுகிறது.

**திருமண அழைப்பிதழ்**

திருமண அழைப்பிதழ் உற்றார் உறவினர் நட்பு வட்டாரம் அனைவருக்கும் நாம் திருமணம் குறித்து கொடுக்கும் அறிவிப்புமடல் எனலாம். சாதி மதப் பாகுபாடு இல்லாமல் அனைத்து தரப்பாரும் திருமண அழைப்பிதழ் வழங்குதல் ஒரு சம்பிரதாயமாக கடைப்பிடிக்கப்படுகிறது. அவரவர் பழக்கப்படி சமயம் சார்ந்த குறியீடுகளோடு “ஏழரைப்பங்காளி வகையறா” நாவலில் தாவுத்தின் திருமணத்திற்கு குத்துஸ் என்பவர் முன்னிலையில் அழைப்பிதழ் ஏற்பாடு செய்தனர். பத்திரிக்கை மிகவும் ஆடம்பரமாப அமைந்திருந்தது. இஸ்லாம் சமய மக்கள் சற்று ஆடம்பரமாக அலங்காரமான வாழ்வுப் பிரியர்கள் என்பதை இது உணர்த்துகிறது. “இது மாதிரி பத்திரிகை அடிக்கிறது இது தான் முதல் தடவையாம். முன்று அடுக்குல ரொம்பப் பெரிசா இருந்துச்சு” பத்திரிகையைப் பாத்த அனைவரும் “இது பத்திரிகையா …சோறு சாப்புடுற அளவுக்கு இவ்வளவு பெரிசாருக்கே. ங்கறது தான்” என்று வியந்து பேசிய பேச்சின் மூலம் நாம் இதைஅறிய முடிகிறது.

**மஹர் தொகை**

இந்துக்கள் திருமணத்தில் பிசப்பணம் என்பது போல இஸ்லாமியர்கள் திருமததில் “மஹர்” எனும் பழக்கம் உள்ளது. திருமண ஓலை படிக்கும் முன்னர் மணமகளுக்கு மணமகன் ஒரு தொகை கொடுக்க வேண்டும். அதற்கு மஹர் என்று பெயர். மாறிவரும் நவீன காலத்தில் “மஹர்” என்பதுமணமகள் விருப்பத்தின் பேரிலும் வழங்கப்படுகிறது. இன்றைய பெண்கள் சாதுரியமாக தன்னை ஹஜ் அழைத்துச் செல்வது படிக்கவைப்பது என்று கூட “மஹர்” கேட்கின்றனர். “ஏழரைப்பங்காளி வகையறா” நாவலில் தாவுத் ஆபில்பீக்கு 10000 மஹர் கொடுப்பதாக அறிவிக்கப்பட்டது இடம்பெற்றுள்ளது. மஹர் மாப்பிள்ளை வீட்டாரின் மரியாதையை மிகுவித்துக் காட்டுவதாகவும் கருதப்படுகிறது.

**திருமணச்சடங்குகள்**

**1.திருமணத்திற்கு முந்தைய சடங்குகள்**

**2. திருமணச்சடங்குகள்**

என்று இரண்டு வகைப்படும்.

**திருமணத்திற்கு முந்தைய சடங்குகள்**

அனைத்து சமூகத்திலும் திருமணத்திற்கு முந்தைய சடங்குமுறைகள் மிக முக்கியத்துவம்

வாய்ந்ததாக கருதப்படுகிறது. "ஹீல்தக்கிராத்" என்பது திருமணத்திற்கு முன் நடக்கும் சடங்குகளில் முதன்மையானதாகும். திருமணத்திற்கு இரண்டு நாட்கள் முன்னர் தலையில் எண்ணெய் தேய்த்து சந்தனம் தடவி மஞ்சள் நிற சேலை ரவிக்கை அணியச் செய்து "மஞ்சா" வைத்தனர். கையில் கங்கன் கட்டிவிட்டனர். எங்கள் வீட்டில் திருமணம் என்று ஊருக்கு அறிவிக்கும் பொருட்டுடோல் கொட்டிப் பெண்ணைப் பற்றி பாட்டுப்பாடுவர். "ஏழரைப்பங்காளி வகையறா" நாவலில் ஆபில்பீக்கு இந்த சடங்குகள் நடைபெற்றதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இது மஞ்சள் சடங்கு என்றும் அழைக்கப்படுகிறது. மணமகளுக்குச் செய்வது போலவே "மணமகனுக்கும் சந்தன நிறத்தில் வேஷ்டி சட்டை அணியுமாறு செய்து கங்கன்கட்டிவிட்டனர். அதற்கு ஹீல்தக்கிராத் என்று பெயர்" இச்சடங்குகன் "ஏழரைப்பங்காளி வகையறா" நாவலில் தாவுத்திற்கு அவரது திருமணத்தின் போது செய்யப்பட்டது.

**மாப்பிள்ளை ஊர்வலம்**

பெண் வீட்டுத் திருமணம் என்றால் மாப்பிள் ளை அழைப்பும் பின்னை வீட்டுததிருமணம் என்றால் பெண் அழைப்பும் நடைபெறுவது வழக்கம். இஸ்லாம் வழக்கப்படி மாப்பிள்ளை ஊர்வலமாக பெண் இருக்கும் இடத்திற்கு அழைத்துச்செல்வர். தாவுதின் திருமணத்திலும் "ரக் அத் நஃபில்" என்ற தொழுகைகளை முடித்துவிட்டு மாப்பிள்ளைக்கு புத்தாடை கொடுத்து அவரவர் வசதிப்படியான வாகன ஏற்பாடு செய்து அழைத்துச் செல்வர். "ஏழரைப்பங்காளி வகையறா" நாவலில் தாவுத் யானை மீது அமர வைத்து அழைத்து வரப்பட்டான். இந்த மாப்பிள்ளை அழைப்பு" ஷப்ப்ஷ்" என்றழைக்கப்படுகிறது.

**பால்பழம் கொடுத்தல்**

இந்துக்கள் சமூகத்தில் மணம் நடைபெற்ற பிறகு இருக்கும் சடங்கு பால்பழம் கொடுத்தல் ஆகும். இஸலாமிய்கள் மாப்பிள்ளை அழைப்பு நிறைவுற்ற பின் பால்பழம் கொடுத்தல் நடைபெறும். இந்நிகழ்வு துத் மௌஜ் என்றழைக்கப்படுகிறது. மணமகனின் உற்சாகத்தை அதிகரிக்க இது போன்ற சடங்குகள் பின்பற்றப்படுகின்றன.

**பெண்பார்க்கும் படலம்**

திருமணம் நடந்து முடிந்த மறுநாள் நடைபெறும் வீடு பார்க்கச்செல்லுதல் அல்லது சம்பந்தம் கலத்தல் போன்ற நிகழ்வுகள் நடைபெறும். இஸ்லாமியர்கள் மணம் முடிந்தபின்னரே மணமக்கள் சந்தித்துக் கொள்ள வேண்டும் என்ற பழைய முறைப்படி பெண்பார்க்கும் படலம் எனும் சடங்கினை நிகழ்த்துகின்றனர். "ஏழரைப்பங்காளி வகையறா" நாவலில் தாவுத்தும் ஆபில்பீயும் திருமணம் முடிந்த பின்னர் தான் ஒருவரை ஒருவர் சந்தித்தனர். "அப்பாஸ் பாய் தோப்பு" நாவலில் உசேனும் ரமீஜாவும் அதனை மீறி ஒருவரையொருவர் சந்தித்தனர் என்ற செய்திகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**மச்சினன் முறை காசு வாங்கல்**

மணமகளின் சகோதரன் தாலி கட்டும் முன் மணப்பந்தலில் மணமகனை வழி மறித்து காசு வாங்குவர். "ஏழரைப்பங்காளி வகையறா" நாவலில் ஆபில் பீ திருமணத்தில் அவளது அண்ணன் சாலாருதீன் தாவுதை வழிமறித்து மச்சினன் காசு கேட்க அவனுக்கு பத்து ருபாய் கொடுத்த பின்னரே மணமேடையில் ஏற அனு மதியளித்தான்.

**திருமுண அறிவிப்பு**

நட்பும் உறவும் அணி திரள நிகழும் மண நிகழ்வின் போது மணமக்கள் பெயர் மணம் நிகழும் நேரம் போன்றவை அறிவிப்பு போல ஓதப்படும். இப்பணியை இமாம் என்பவர் செய்வார்.

**"பிஸ்மில்லா ஹிர்ரஹிமானிர் ரஹிம் நான் 1944 – ம் வருஷம் மார்ச் மாதம் 18ம் தேதி ரபியுல் அவல் பிறை 7-ல் கபுல் சொன்ன இந்த மணமக்களில் மரீஹீம் ரஜாக் சாயபுவின் சிரஞ்சீவி புத்திரன் நுஸரே நஜர் சையத் தாவுத் மதுரை மாவட்டம் திருவாலய நல்லுஸர் கிராமம் மகதுஸம் சாயபுவின் கனிஸ்ட புத்திரி நுஸரே சஷ்மி ஆபில்பீக்கு பணம் பத்தாயிரம் மஹராக வழங்க நபி பெருமான் "சல்லல்லாஹீ அலைவஸ்ல்லம் அவர்கள் வழியில் நடக்கும் இந்த நிக்காஹ் படிக்கப்படுகிறது."**

என ஏழரைப்பங்காளி வகையறா நாவலில் தாவுதின் திருமண அறிவிப்பு ஓதப்பட்டது. திருமணம் ஓதி முடிந்ததும் மணமகளின் தந்தை மணமகனுக்கு எதிராக அமர்ந்து ஆபில்பீ எனும் என மகளை உங்கள் மனைவியாக ஏற்றுக்கொள்ள சம்மதமா என்று கேட்பார். "ஏழரைப்பங்காளி வகையறா" நாவலில் மகதுஸம் சாயபு தாவுதிடம் கேட்க அவனும் ஏற்கிறேன் என்று மும்முறை சம்மதம் தெரிவித்ததும் நபி முறைப்படி மந்திரம் ஓதினர். பிறகு சிவப்பு வண்ணத்துணியில் மிசரி பாதாம் கஜீர் இவற்றை மணமகன் தலைக்கு மேலே பிடித்து பிறகு மக்கள் பக்கம் பார்த்து வீசுவர். இது தாவுதின் திருமணத்தில் நடைபெற்ற ஒரு சடங்குமுறையாகும்.

**ஹீக்ரனா**

நலுங்கு என்பதே ஹீக்ரனா எனப்படுகிறது. "மணமகள் வீட்டில் ச்ச்வுக் புரா நடக்கும். பெண்ணிற்கு நாத்தனார் உறவு உள்ளவர்களும் பிற சுமங்கலிப்பெண்களும் மணமகளை அமர வைத்து சிவப்பு வண்ணத் துணி விரித்த பச்சரிசியால் கோலம் வரைந்து பாடல் பாடுவர். இது கேலிப்பாடலாக அமையும்." "மணமகளுக்கு மாப்பிள்ளை வீட்டர்ா கொண்டு வந்த சேரா என்ற மலரை நெற்றியில் கட்டி மலர்ச்செண்டும் கொடுப்பர். பெண்கள் சந்தனத்தை அணிவிப்பர். தட்டில் வைக்கப்பட்டுள்ள பணத்தை எடுத்து திருஷ்டி கழ்ப்பர். சிலர் தங்கள் பணத்தை எடுத்து திருஷ்டி கழித்துப் பின்னர் அனபளிப்பாக அதை வழங்கிச்செல்வர். இச்சடங்குகள் நிறைவுற்ற பிறகு மணமகன் இல்லத்திலிருந்து வந்த ஆடை அணிகலன்களை அணியச் செய்வர். இச்சடங்கு மணமகளுக்கு மட்டுமல்ல மணமகனுக்கும் மணமகள் வீட்டார் சார்பாக நடைபெறும்." "ஏழரைப்பங்காளி வகையறா" நாவலில் தாவுத் ஆபில்பீ திருமணத்திலும் "அப்பாஸ்பாய் தோப்பு" நாவலில் உசேன் ரமீஜா திருமணத்திலும் இச்சடங்குகள் சுட்டப்பட்டுள்ளன.

**திருமணம் நடைபெறும் முறை**

பொதுவாக இஸ்லாமியர்கள் தங்களது வீடு அல்லது பள்ளிகளில் திருமண அறிக்கையைப் படிப்பார்கள். இஸ்லாமியத் திருமணம் பொதுவாகவே இரவு நேரத்திருமணமாக இருந்தது." இமாம் படித்த பிறகு பாத்திஹா ஓதுவர். அதன் பிறகு வந்திருப்பவர்களுக்கு வெற்றிலை பாக்கு சீனி வழங்குவர். இதற்கு 'ஷக்கர் பான்க கிதாஜத்' என்று பெயர். "ஏழரைப்பங்காளி வகையறா" நாவலில் இம்முறையிலே நிககாஹ் நடைபெற்றது. தாவுதின் திருமணம் இஸ்மாயில் தாசில்தாரரின நினைவாகக் கட்டப்படட பள்ளி வாசலில் வைத்து நடைபெற்றது. திருமணம் நிறைவுற்ற பிறகு "ஜீல்வா" விளையாட்டு நடைபெறும். இது நபி வழியில் நடைபெறும் திருமணமுறை ஆகும. பொருளாதார வசதி நிரமபியவர்கள் மாமிச உணவு வழங்குவர். இது இன்று அனைவராலும் பின்பற்றப்படகிறது. பின்னர் மூன்று நாட்கள் வரை சடங்குகள் நடைபெறும்.

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

**முடிவுரை**

இஸ்லாம் சமயம் சார்ந்த மக்களின் திருமண முறைகளை அர்ஷியா அவர்கள் தங்களது படைப்பில் எங்ஙனம் வெளிப்படுத்தியுள்ளார் என்பது புலனாக்கப்பட்டுள்ளது. திருமணத்தில் செய்யப்படும் சடங்குமுறைகள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

**துணைநின்ற நூல்கள்**

[1] *திருக்குர்ஆன்* 30-21

[2] அர்ஷியா - *ஏழரைப்பங்காளி வகையறா.*

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.